## புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2019 ஆடி மாதம் 08ம் திகதி தொடக்கம் 14ம் திகதி வரை

### *"அப்பா அன்னையே என்று அழைக்க வரம் பெற்ற நாம் பேறுபெற்றவர்களாவோம்."*

01. புகழ்ச்சிக்கான அறிமுகம்:

- மனித தாயின் கற்பப்பையில் குழந்தை போஷாக்கு பெறுவதும், ஆழமான பாதுகாப்பை அனுபவிப்பது போல நாமும் அப்பா அன்னையின் கற்பப்பையில் தாய்மையின் அன்பினால் போஷாக்கு பெற்று, வளர்ச்சி அடைந்தவாறு முழுமையாகின்றோம்.
- மூவித பகைவர்களிடமிருந்தும், உலகத்தினுள்ளும் எமக்கு பலவிதமான சோதனைகள் இருக்கின்றன. பலவிதமான துன்பங்கள், சத்துருவானின் பிடிகள் இருக்கினறன. ஆனாலும் நாம் அப்பா அன்னையினுள் பாதுகாப்பான பிள்ளைகள் ஆவோம். ஏனென்றால் தாய்மையின் அன்பு எம்மை பாதுகாக்கின்றது. இத் தெய்வீக கனவை நாம் உரிமையாக்கிக் கொள்வோம்.
- புபுது பாடல் இல. 146

02.. கடந்தவார நற்செய்தியை திரும்பவும் தியானித்து அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும்.

03. நாளுக்குரிய நற்செய்தி :-

- பிள்ளைகள் அம்மா என்று அழைக்கும் போது, முறையிடும் போது தமது பிள்ளையின் குரலை செவிகளில் கேட்கும் போதே அன்பார்ந்த தாயினூடாக, அவரது இதயத்திலிருந்து பாசம், அன்பு வழிந்து வரும் என்பதற்கு எவ்வித சந்தேகமும் இல்லை. அவ்வாறானால் நாம் அனைவரும் அப்பா அன்னையின் கற்பப்பையில் இருக்கின்றோம் என்பதற்கு விழிப்புற்று இருப்போம். அவ்வாறு இறை கற்பப்பையில் இருக்கின்ற நாம் அப்பா அன்னையே என்று அழைக்கும் போது, முறையிடும் போது மகத்துவமிக்க இறைவனிடமிருந்து வழிந்து வருகின்ற தாய்மையின் அன்பை நாம் உரிமையாக்கிக் கொள்வோம். தாய்மையின் அன்பை அனுபவிப்போம்.
- இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திருவிவிலிய பகுதிகளை வாசித்து இறைவனின் அன்பினூடாக வெளிப்படுகின்ற தாய்மையின் அன்பு எமது வாழ்விற்கு தொடர்பு கொள்ளும் விதத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்.

i. தொடக்கநூல் 1:27 **"கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களை படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை படைத்தார்."**

ii. எரேமியா 1:5 **"தாய் வயிற்றிலேயே உன்னை உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்கு முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்"**

04. மேலும் தியானிப்பதற்காக :

- அன்பினால் படைக்கப்பட்ட மனிதனுடன் படைப்பின் படைப்பாளர் தந்தையின் தாய்மையின் அன்பை பகிர்ந்துக் கொண்டார். மனிதன் என்பவன் ஆணும் பெண்ணும் ஆவான். அவ்வாறானால் தெய்வீக அன்பு என்பது தந்தையின் அன்பு மாத்திரமல்ல தாயின் அன்பும் என்று மனித படைப்பிலே வெளிப்படாகின்றது.
- நாம் இறை கற்பப்பையில் இருக்கின்றோம் என்பதில் கருத்து நாம் அனைவரும் தாய்மையின் அன்பில் நிலைத்திருக்கின்றோம் என்பதாகும். அதில் போஷாக்கு பெற்றுகின்றோம் என்பதாகும்.

இறைவன் பரிசுத்தமானவர். ஆகையால் நாம் அவரிடமிருந்து மிகவும் தூரத்தில் இருப்பது போல மிகவும் அண்மையிலும் இருக்கின்றோம். தனது பிள்ளையை அன்பு செய்கின்ற தாயை போல, இறை ஆண்டவரின் அன்பு எம்மை தேற்றுவது அவ்வாறேயாகும். அவரும் எம்முடன் மகிழ்கின்றார். துன்ப துயரங்களில் எம்மை தேற்றியவாறு எமது இதயத்தின் கண்ணீரை துடைக்கின்றார். எம்மை நன்றாக பாதுகாக்கின்றார். இவை கருத்துகள் சில அல்லது வார்த்தைகள் சில என்று அல்ல **இவை உண்மை** என்பதை அனுபவிப்போம்.

திருத்தூதர் பணி 17:28 **“அவரைச் சார்ந்து தான் நாம் வாழ்கின்றோம். இயங்கின்றோம். இருக்கின்றோம்….நாம் அவருடைய பிள்ளைகள்”**

05. வாரம் முழுவதும் செயல்பாட்டிற்காக :

- வாழ்வின் நிகழ்வுகளில், பரிசுத்த வேதாகமத்தை தினமும் தியானிக்கும் போது அதில் உள்ளடங்கி இருக்கின்ற தாய்மையின் அன்பை அறிந்து கொள்வோம்.
- அதிக அதிகமாக அப்பா அன்னையின் அன்பு, பாசம், தயவு எத்தகையது என்பதை அறிந்துகொண்டு அனுபவிக்கும் அளவிற்கு எமது இதயங்கள் தாய்மையின் அன்பினால் நிரம்பி வழிந்தோடுவது போல, எம் வழியாக மற்றவர்களிடமும் வழிந்து செல்கின்றது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.
- மனிதன், குடும்பம், சங்கம், சமுதாயத்தினுள் மற்றவர்களிடம் நாம் அனுபவிக்கின்ற அன்பை செயற்படுத்துவோம்.
- பரிசுத்தமான இறைவன் எமது அன்னை என்பதற்கு சாட்சி பகிர்வோம். அவ் வழியாக மகத்துவமிக்க இறைவனை மகிமைப்படுத்துவோம். அவரது விருப்பத்தை நிறைவேற்றுவோம்.
-

06. இறுதிச் பகழ்ச்சி :

- அப்பா அன்னையே என்று அழைக்க வரம் பெற்ற நாம், எமது செயலில் வாழ்வினுள் தாயின் அன்பை அனுபவிப்பதற்கு வல்லமை கேட்டு செபிப்போம்.
- புபுது பாடல் இல 158 அல்லது தாய்க்கு அன்பு வற்றிப்போகுமோ என்ற பாடலை பாடவும்.